மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கோழி வளர்ப்புத் திட்டத்தில் இன்றைக்கு ஓரளவு நல்ல லாபம் வரும் முறையில் அந்தத் தொழிலை நடத்துவதற்கு வசதியாக அரசாங்கத்தின் துறைகள் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும் அந்த வளர்ப்புத் தீனி முதலியவைகள் இப்பொழுது தரப்படுகிறது. ஆகவே சப்சிடி தேவையில்லை. ஆனால் ஈரோட்டிலும் மற்றப் பகுதிகளிலேயும் இதில் ஈடுபட்டிருப்பவர்கள் மார்க்கெட்டிங் ஃபெசிலிட்டி தான், விற்பனை வசதிதான் கேட்கிறார்கள். அதை அரசாங்கம் செய்துவிட்டால் இந்தத் துறையிலே இன்னும் தீவிரமாக ஈடுபட முன்வருவார்கள்.

மாயூரம் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கும் குடியிருப்புகள்

*579 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகராட்சியில் பணிபுரியும் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதுபோன்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாயூரம் நகராட்சிப் பகுதியில் அங்கே பணியாற்றிக்கொண்டிருக்கும் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு இதற்கு முன் அங்கே 60,000 ரூபாய் கடனாகவும், மானியமாகவும் தமிழக அரசு வழங்கியிருக்கிறது. ஆனால் இன்னும் சரியாக இடம் கிடைக்கவில்லை என்று மாயூரம் நகராட்சியில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதைத் தவிர்ப்பதற்கு மாயூரம் நகராட்சியில், குறிப்பாக கலைஞர் கருணாநிதி காலனியிலாவது இந்தக் குடியிருப்பு வசதிகளை உருவாக்கித் தர மாயூரம் நகராட்சிக்கு அரசு ஆலோசனை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தர வேண்டுமென்று இந்த அரசு திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. ஆனால் உரிய இடத்தை ஆங்காங்கேயிருக்கும் நகராட்சிமன்றங்கள் தேர்ந்தெடுத்துக் கொடுக்க வேண்டும். அப்படிப் பலமுறை மாயூரம் நகராட்சியில்

நாங்கள் கேட்டிருக்கிறோம். அவர்கள் இடம் கிடைக்கவில்லை என்ற சாக்கைச் சொல்லி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியதைப்போல் கருணாநிதி நகரில் அவர்களுக்கு இடம் கிடைக்கும், அதைக் கொடுப்பதற்கு நகராட்சி மன்றம் தயாராகயிருந்தால், மாண்புமிகு உறுப்பினரவர்கள் நகராட்சியிடம் சொல்லி வாங்கித் தந்தால் விரைவில் வீடு கட்டும் திட்டத்தைச் செயல்படுத்த முடியும்.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : தலைவரவர்களே, ஏற்கனவே நிலம் கையகப்படுத்தப்பட்டும் நீண்ட காலமாக வீடுகள் கட்டாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதை நிவர்த்திக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, நிலம் கையகப்படுத்தி வீடு கட்டாமல் இருப்பது பெரும்பாலும் அரிசன மக்களுக்கு அரசாங்கமே நிலம் எடுத்துக் கொடுக்கும் திட்டத்தின் மூலம்தான் இருக்க முடியும். இந்தக் கேள்வி மாயூரம் நகராட்சியின் பணிபுரியும் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பது. ஆகவே இந்தத் திட்டத்தின் அடிப்படையில் பெரும்பாலான இடங்களில் நிலம் கிடைக்காமல் தாமதம் ஆகிறது. நிலம் கிடைப்பது மிகவும் அரிது. காரணம், அந்த நகராட்சியின் எல்லைக்குள்ளேயே இருக்க வேண்டுமென்ற அரசின் கருத்தும் அனுப்பப்படுகிறது.

மேலப்பாளையம் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

*580 வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம், மேலப்பாளையத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடியிருக்க போதுமான வீட்டுமனை இல்லை என்பது உண்மையா?

(இ) அதற்காக நிலம் கையகப்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(உ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?